**காரைநகர் பிரதேசசபை**
**யாழ்ப்பாணம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 17 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைநகர் பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபையின் பாவனையில் உள்ள ரூபா 6,390,000 பெறுமதியான பிக்கப் வாகனம் உரிமை மாற்றப்படாது இறுதிக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் ரூபா 6,390,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையிலுள்ள 6 வாகனங்களிற்கான உரிமை மாற்றம் செய்யப்படாமலும், பெறுமதி மதிப்பிடப்படாமலும் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களினது பெறுமதி கணக்குகளில் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(இ) காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து 2011ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,422,220 கணக்கில் காட்டப்பட்டிருக்காமையினால் ரூபா 5,422,220 நிதிக்கூற்றுக்களில் திரண்ட நிதியில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்கு

சபையினால் 2015ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 1,423,230 இன்றுவரை தீர்வு செய்யப்படாமல் உள்ளது.

**1.3.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

சபையினால் காணி கட்டிடங்கள் பதிவேடு, அளவைப்பத்திர பதிவேடு, காணி விற்பனவு வரி பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் இல.148 (1) | வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு பிரதேசசபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த வாகனங்கள் விலங்குகள் மீதான வரியானது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி நிருவாக) விதிகள் அத்தியாயம் III விதி 32 | சபையினால் வீதவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன், வீதவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) வடமாகாண நிதி விதிக் கோவை நிதி ஒழுங்குவிதி 107 | ரூபா 494,074 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு செலவினங்களை சான்றுறிதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 5,992,332 இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 4,865,497 இருந்தது. அதன்படி மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,126,835 ஆல் அதிகரித்துள்ளமையைக்காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 3,191,222 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறியமிகையாக ரூபா 721,570 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 2,469,652 ஆல் அதிகரித்துள்ளமையைக்காட்டுகின்றது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 31,453,460 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 28,411,441 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 3,042,019 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| இறைகளும் வரிகளும் | 20 | 8 | - |
| குத்தகை வாடகைகள் | 1,737 | 1,735 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 267 | 265 | - |
| ஏனைய வருமானங்கள் | 30,464 | 27,317 | 9,650 |
| **மொத்தம்** | **32,488** | **29,325** | **9,650** |

**2.4.2 ஆதனவரி**

சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்காமையினால் ஆதனவரி இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 ஏனைய வருமானம்**

சபையின் எல்லைக்குட்பட்ட 05 மயானங்களிற்கு மயானவரி சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 முத்திரைக் கட்டணம்**

2011ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பெறப்படவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 11,689,594 அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)சபையில் 45 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 37 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன்படி 09 பதவியினர் பற்றாக்குறையாக உள்ளதுடன் 01 பதவியினர் மேலதிகமாகவும் உள்ளார்.

(ஆ) சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வருடமொன்றிற்கு குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களே நடைபெற்றுள்ளது.

### 3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபையில் காணப்படும் உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள், றோணியோ இயந்திரம் என்பன பயன்பாடின்றி காணப்படுகின்றது.

### 3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்றபோதும் மீள்சுழற்சி செய்யப்படாமல் அவை தரம் பிரிக்காது ஒன்றாகவே குவிக்கப்படுகின்றது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 1,169 தொடக்கம் ரூபா 3,108,127 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.